மனச்சான்றுப்படி பணியாற்றும் துணிச்சல்மிகு

# பத்திரிகையாளர்களுக்கு எனது பாராட்டுகள்!

## உலகப் பத்திரிகை சுதந்திர நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, மே 4-

உலகப் பத்திரிகை சுதந்திர நாளை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று சமூக வலைதளங்களில் விடுத்த வாழ்த்துச் செய்தியில், "மனச்சான்றுப்படி பணியாற்றும் துணிச்சல்மிகு பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்கள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, முதல்வர் அவர்கள் வலைதளங்களில் விடுத்தச் செய்தி வருமாறு:-

**உலகப் பத்திரிகை சுதந்திர நாளில், பல்வேறு தாக்குதல்கள், அச்சுறுத்தல்களுக்கு இடையேயும் ஜனநாயகத்தின் நான்காவது தூணை வலிமையாக வைத்திருக்க வேண்டி மனச்சான்றுப்படி பணி யாற்றும் துணிச்சல்மிகு பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**




இவ்வாறு, முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தெற்கு திட்டங்குளம் கிராமத்தில் தியாகி. இம்மானுவேல் சேகரனாரின் முழுவுருவ வெண்கல சிலையை கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் நேற்று திறந்து வைத்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்க்கண்டேயன், எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மேயர் என்.பி.ஜெகன், ஒன்றியச் செயலாளர் பீக்கிலிப்பட்டி முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மஞ்சுவிரட்டில் மாடுமுட்டி உயிரிழந்த

# காவலரின் குடும்பத்திற்கு ரூ. 20 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,மே.4–

மஞ்சுவிரட்டில் மாடுமுட்டி உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு ரூ. 20 லட்சம் நிதி வழங்க உத்தரவிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

**புதுக்கோட்டை மாவட்டம் கல்லூரில் நேற்று (3–5–2023) நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியின் போது அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மீமிசல் காவல் நிலைய காவலர் நவநீதகிருஷ்ணன், (வயது32) என்பவரை எதிர்பாராத விதமாக மாடுமுட்டியதில் உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.**

**உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த காவலர் நவநீத கிருஷ்ணனுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து இருபது இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நல்ல நகைச்சுவை – குணச்சித்திர நடிகராக விளங்கியவர்!

# நடிகர் மனோபாலா மறைவு ; தமிழ்த் திரையுலகிற்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, மே 4-

நடிகர் மனோபாலா அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து அதிர்ச்சியுற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தியில், “அனைவரையும் மகிழ்விக்கும் நல்ல நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நடிகராக விளங்கிய நடிகர் மனோபாலா அவர்களின் மறைவு; தமிழ்த்திரையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளரும், நடிகருமான மனோபாலா அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.**

**சிறந்த இயக்குநராக மட்டுமின்றி, அனைவரையும் மகிழ்விக்கும் நல்ல நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நடிகராகவும் விளங்கிய அவரது மறைவு தமிழ்த்திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.**

**சமீபத்தில் என்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டு அவர் பாராட்டிப் பேசியது இந்தத் தருணத்தில் என் நெஞ்சில் நிழலாடுகிறது.**

**மனோபாலாவின் மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், திரையுலகினர், ரசிகர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தேனி மாவட்டம் – போடி மெட்டு அருகில் சாலை விபத்து!

# ஆறுபேர் உயிரிழப்பு - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல்!

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - தலா ரூ.2 லட்சம் நிவாரணம் அறிவிப்பு!

**சென்னை, மே 4-**

**திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் குறுவட்டம், பாலாமடை கிராமத்திலிருந்து திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், மூணாறு அருகே உள்ள தனியார் எஸ்டேட்டை நோக்கி கடந்த 22.4.2023 அன்று வேனில் சென்ற போது தேனி மாவட்டம், போடிமெட்டு அருகே உள்ள தோன்றிமலை என்னுமிடத்தில் அவர்கள் சென்ற வேன் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானதில் கல்குறிச்சியைச் சேர்ந்த வள்ளியம்மாள், (க/பெ.செல்லத்துரை) (வயது 70), மேலப்பாலாமடையைச் சேர்ந்த ஜானகி, (க/பெ. ஆறுமுகம்) (வயது 65), பாலாமடை, இந்திரா நகரைச் சேர்ந்த பெருமாள், (த/பெ.செல்லையா) (வயது 58), கொடியங்குளத்தைச் சேர்ந்த திருமதி. சுதா (வயது 25), கல்குறிச்சியைச் சேர்ந்த சுசிந்திரன், (த/பெ. சுடர்ஒளி) (வயது 8), மற்றும் சுரேந்திரன், (த/பெ.சுடர்ஒளி) (வயது 6) ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து தேனி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் திருமதி.சீதாலெட்சுமி, (க/பெ.சுடர்ஒளி) மற்றும் திருமதி. இந்திராணி, (க/பெ.பெருமாள்) ஆகியோருக்கு சிறப்பான சிகிச்சை வழங்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை சோ. பால்ராஜ்

### மே 4 (2015)



**இளம் வயதிலேயே கழகத்தின்மீது பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஐ.சி.எப்–ல் பணியாற்றிய போது தொ.மு.ச. பேரவை ஆரம்பித்த போதே அதில் பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் –பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் “பால் உள்ளம்கொண்ட பால்ராஜ்”, “பாட்டாளிகளின் தோழன் பால்ராஜ்” என்று பாராட்டப்பட்ட இவர், 1989–ல் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப்பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றதோடு, இரயில்வே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே இலங்கைத் தமிழர்களுக்காக ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அமெரிக்க சிறுரக விமான விபத்து!

கலிபோர்னியா,மே.4-

அமெரிக்காவில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியதில் 3 பேர் பரிதாபமாக இறந்தனர். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சிறிய ரக விமானத்தில் 3 பேர் பயணம் செய்தனர். பிக் பியர் என்ற குடியிருப்பு பகுதி அருகே சென்றபோது, விமானம் திடீரென விமான நிலைய கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனே மீட்பு படையினர், தொடர்பு துண்டிக்கப்பட்ட இடத்திற்கு விரைந்தனர். நீண்ட நேர தேடுதலுக்கு பிறகு, பிக் பியர் பகுதியில் விமானம் கீழே விழுந்து நொறுங்கி கிடந்ததை கண்டுபிடித்தனர். இந்த விபத்தில், விமானத்தில் இருந்த 3 பேரும் உயிரிழந்தனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாம்பரம் மாநகரில் – முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாபெரும் கபடிப் போட்டியைத் துவக்கி வைக்கிறார்!

## டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ. அன்பரசன் - ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு! எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, மே.4-

நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் 50 ஆண்டுகளுக்கு மேலாக தலைவராக பொறுப்பேற்று அன்னை தமிழ்நாட்டை வடித்தெடுத்த சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தாம்பரம் மாநகர திமுக மற்றும் தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழகம் இணைந்து நடத்தும் மாபெரும் கபடி போட்டி மேற்கு தாம்பரம் டி.டி.கே.நகர் கலைஞர் திடலில் 5,6,7 தேதிகளில் எனது தலைமையில் (எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ.) 5-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறும் மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி இந்தப் போட்டியை கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கி சிறப்பித்திட உள்ளார்.

கழக நாடாளுமன்ற குழு தலைவர் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் மி.அ. வைத்தியலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் தா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து. மூர்த்தி, வே.விஸ்வநாதன், மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல குழு தலைவர்கள் ஈஸ்.இந்திரன், இ.கருணாநிதி, இ.ஜோசப், அண்ணாதுரை, எஸ்.சேகர், மாநகர நிர்வாகிகள் நரேஷ், கண்ணா, வா.விஜயரங்கன், பி.சதாசிவம், பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ், ஆ. நடராஜன், தா.ஜெயக்குமார், ஏ.கே. கருணாகரன், இ.எஸ். பெர்னாடு, தகவல் தொழில்நுட்ப மாநில துணை அமைப்பாளர் அ. தமிழ்மாறன், தகவல் தொழில்நுட்பம் மாநில துணை அமைப்பாளர் என். நவீன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.டி. கார்த்திக், துணை அமைப்பாளர்கள் கோல்ட் பிரகாஷ், ஜா.செந்தில், தேவராஜ், வி.விஜயகுமார், கோ. ஜாகிர், உசேன், கே.பாக்யராஜ், எல். பிரபு, இரா.விஜயகுமார், சி.பரிமளா, பி. ரவிச்சந்திரன், கி.வேல்மணி, எஸ்.ஜி. கருணாகரன், மலர், மு.கருணாநிதி, டி.ஆர். கோபி, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.கே.நெப்போலியன், கொடி ஆர்.தாமோதரன், மு.நாகலிங்கம், கா.ரமேஷ், தா.ராஜாராமன், கே.தனசேகரன், பா.டில்லி மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மாநகர வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக்கழகத்தின் நிர்வாகிகள், பகுதி, வட்டப் பிரதிநிதிகள், மாநகரப் பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கார்த்திக் மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக், நன்றி உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என எஸ்.ஆர். இராஜா எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.05.2023) சென்னையில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுன்டேசன் (‘TN Champions Foundation) தொடர்பாக தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தேசிய மற்றும் தனியார் வங்கிகள், மத்திய, மாநில பொது நிறுவனங்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.